'தினத்தந்தி' புகார் பெட்டி

'தினத்தந்தி' புகார் பெட்டிக்கு 91761 08888 என்ற 'வாட்ஸ்-அப்' எண்ணில் வந்துள்ள மக்கள் குறைகள் தொடர்பான பதிவுகள் வருமாறு:-

சாலையோரம் குவியும் குப்பைகள்

வேலூர் புதிய பஸ் நிலையம் அருகே முத்து மண்டபம் செல்லும் சாலையோரம் ஏராளமான பிளாஸ்டிக் கழிவுகள், குப்பைகள் குவிந்து கிடக்கிறது. இதனால், அப்பகுதியில் கடுமையான துர்நாற்றமும் வீசுகிறது. மேலும் துர்நாற்றமும் வீசுகிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

–கப்பிரமணியம், வேலூர்.

நடவடிக்கை எடுப்பார்களா?

வேலூர் புதிய மாநகராட்சி அலுவலகம் அருகில் டூட்டர்மன் பகுதி தெருவில் கழிவுநீர் கால்வாய் மீது அமைக்கப்பட்டிருக்கும் சிமெண்டு சிலாப்பு உடைந்து கம்பிகள் நீட்டியபடி ஆபத்தான நிலையில் உள்ளது. உடைந்த பகுதியைச் சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

–எலி, வேலூர்.

சாலையோர ஆபத்தான கிணறு

காட்பாடியில் இருந்து குடியாத்தம் செல்லும் நெடுஞ்சாலையில் வடுகன்குட்டை சாலையோரம் தடுப்புச்சுவர் இன்றி காணப்படும் பாழடைந்த கிணறு ஒன்று உள்ளது. இந்தக் கிணறு சாலையில் அருகே உள்ளதால் இரவில் அந்த வழியாகச் செல்லும் வாகன ஓட்டிகள் கிணற்றில் வாகனத்தை விட்டு விடும்பட்சத்தில் சிக்கும் நிலை உள்ளது. எனவே இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து சாலையில் அருகே உள்ள பாழடைந்த கிணற்றை மூட வேண்டும்.

–வெங்கடேசன், காட்பாடி.

வீணாக செல்லும் குடிநீர்

வேலூர் ஆற்காடு சாலையில் கிரீன் தியேட்டர் அருகில் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், தண்ணீர் வீணாக வெளியேறி சாலையோரம் தேங்குகிறது. உடைந்த குடிநீர் குழாயை சரி செய்ய சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

–ஜெயவேல்முருகன், வேலூர்.

கால்நடைகளால் இடையூறு

வேலூர் மாநகராட்சியில் முக்கிய சாலைகள், தெருக்களில் மாடுகள், நாய்கள் சுற்றித்திரிகின்றன. இவைகளால் பொதுமக்களுக்கு

சென்னை லயோலா கல்லூரியில்

பேராசிரியராக திருநங்கை நியமனம்

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூன்.23-

சென்னை லயோலா கல்லூரியில் உதவி பேராசிரியராக திருநங்கை ஜென்னி நியமனம் செய்யப்பட்டு உள்ளார். அவருக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

திருநங்கை ஜென்னி

திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை புதூரை சேர்ந்தவர் ஜென்னி. 2-ம் வகுப்பு படிக்கும்போது தான் ஒரு திருநங்கை என்பதை உணர்ந்த அவர், தொடர்ந்து பள்ளிப்படிப்பை முடித்தார். பள்ளிப்படிப்பை நிறைவு செய்யும்போது, திருநங்கைகள் படும் கஷ்டத்தை உணர்ந்த ஜென்னி, எப்படியாவது ஆராய்ச்சிப் படிப்பை முடித்து பேராசிரியராக வரவும் வரவேண்டும் என்று முடிவு செய்துள்ளார்.

அதன்படி, பி.ஏ., எம்.ஏ., எம்.பில். ஆங்கிலத்தில் உயர் கல்வியை முடித்த கையோடு, லயோலா கல்லூரி ஆங்கிலத் துறை தலைவர் மேரி விஜயா பொற்செல்வி வழிகாட்டுதலில் ஆராய்ச்சி படிப்பையும் நிறைவு செய்திருக்கிறார். உயர்கல்வி படிப்பினை தன்னுடைய சொந்த முயற்சியே யேயோதான் ஜென்னி முடித்து உள்ளார்.

எட்டியத்தில் வெற்றி

அவ்வப்போது வாணொலி, கல்லூரியில் பணி புரிந்தும், சென்னை புத்தக மையத்தில் நிகழ்ச்சி தொகுப்பாளராக இருந்தும், மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் எடுத்தும் அதன் மூலம் வருமானம் ஈட்டி, தன்னுடைய கல்விக்கனவை நிறைவேற்றி இருக்கிறார்.

திருநங்கை ஜென்னி

முதல்-அமைச்சர் வாழ்த்து

அவருடைய இந்த வெற்றிக்கு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்திருக்கிறார். இதுகுறித்து அவர் தனது சமூக வலைத்தள பதிவில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:-

வாழ்த்துகள் ஜென்னி. உங்களது உழைப்பின் ஒளியால் இன்னும் பல நூறு பேர் கல்விக்கரை சேரட்டும். தடைகளையும் புறக்கணிப்புகளையும் கல்வி எனும் பேராற்றலால் வெல்லட்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நேர்கொண்ட

வாழ்த்து தெரிவித்த முதல்-அமைச்சருக்கு திருநங்கை ஜென்னியும் தன்றி தெரிவித்துள்ளார். இதுகுறித்து திருநங்கை ஜென்னியிடம் பேசிய போது, "இந்தியாவிலேயே ஆராய்ச்சி படிப்பை முடித்த முதல் திருநங்கையான என்னை முதல்-அமைச்சர் வாழ்த்தியது எனக்கு பெரிய மகுடம். திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் 'அப்பா'விடம் நான் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

அரசு கல்லூரியில் எனக்கு ஒரு நிரந்தர பணியிடம் ஒதுக்கி கொடுத்தால், என்னை போல் வாழ்க்கையில் சாதிக்க துடிக்கும் திருநங்கைகளுக்கும் அது ஒரு முன்னோடியாக இருக்கும். கஷ்டங்களை தாண்டி சாதிக்கும்போது, நம்முடைய திறமைகளுக்கு கிடைக்கும் பாராட்டுகள் அந்த கஷ்டங்களுக்கெல்லாம் மருந்தாமாறுகிறது' என்றார்.

ஆங்கில துறை உதவி பேராசிரியராக நியமனம்:

திருநங்கை ஜென்னிக்கு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூன்.23-

சென்னை நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரியில் ஆங்கில துறை உதவி பேராசிரியராக திருநங்கையான ஜென்னி நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இதற்கு வாழ்த்து தெரிவித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைத்தள பதிவில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:-

வாழ்த்துகள் ஜென்னி. உங்களது உழைப்பின் ஒளியால் இன்னும் பல நூறு பேர் கல்விக்கரை சேரட்டும். தடைகளையும் புறக்கணிப்புகளையும் கல்வி எனும் பேராற்றலால் வெல்லட்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஆந்திர முன்னாள் முதல்-மந்திரி

ஜெகன்மோகன்ரெட்டியின் கார் மோதி முதியவர் பலி

தனி ஜூன்.23-

ஆந்திர மாநிலம் பல்நாடு மாவட்டம் ரெண்டாபாலா என்ற ஊரில் நடந்த கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்க முன்னாள் முதல்-மந்திரியும், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவருமான ஜெகன்மோகன் ரெட்டி கடந்த 19-ந்தேதி [illegible] அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது அவரை வரவேற்க வந்த வெங்கடாயபாளம் வந்தகா சேர்ந்த சிலி வில்கையா (வயது 67) என்பவர் கார் மோதி உயிரிழந்தார். இதற்கிடையே ஜெகன்மோகன் ரெட்டியின் கார் மோதி அவர் இறந்தார் என்று கூறி, அவரது உறவினர்கள் போலீசாரை தாக்க செய்தனர். ஆனால் இதனை ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி மறுத்துள்ளது.

இந்தியன் வங்கி Indian Bank
இந்தியன் வங்கி
மண்டல அலுவலகம், வேலூர், 5,6,8 அரிஸ்டோ ரோடு தனிப் பிரிவு, கிழக்கு அடுக்கு, ஜெனரல் மார்க்கெட் எதிரில், வேலூர் - 632 001. தொலைபேசி எண்: 0416-2248620
தாராபடவேடு கிளைக்கான அலுவலகத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான டென்டர்களை அழைக்கும் அறிவிப்பு
மேற்கண்ட கிளை அலுவலகத்தை வருகிற ஆண்டு ஜூன் 30ந் தேதி வரை ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு விடப்படுகிறது. ஆர்வமுள்ள வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசுக்கு அடிப்படையில் (உபரியாக கட்டப்பட்ட / கட்டுமானத்தில் உள்ள) அலுவலக வளாகங்களின் உரிமையாளர்களிடமிருந்து 2 ஏ முறையில் தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலம் டென்டர்களை அழைக்கிறது. நவம்பர்மாதம் வரையில் வாடகை எரியாமல் பள்ளம் வரையிலான 11 வருட குத்தகைக் காலத்திற்கு கிளை அலுவலகம்.
டென்டர் படிவங்களை பிரிவுரம் முகவரியில் இருந்து 23.06.2025 முதல் 07.07.2025 வரை ரூ.250 திருப்பி செலுத்தாதது செலுத்தி இந்தியன் வங்கியின், மண்டல அலுவலகம், வேலூர் என்ற முகவரிக்கு DD/TOI மூலம் பெறலாம். டென்டர் அறிவிப்புகளை கடைசி தேதி 07.07.2025 மாலை 3 மணி. டென்டர் மற்றும் டென்டர் படிவங்களின் விவரங்களை www.indianbank.in இல் பெறலாம்.
எங்கள் வாடிக்கையாளர் www.indianbank.in இல் பெறலாம்.
எந்தவொரு காரணத்தையும் கூறாமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.
DGM / மண்டல மேலாளர்
வணிகத் துறை, வேலூர்

கே.வி.குப்பம், காட்பாடி சட்டமன்ற தொகுதிகளில்

த.வெ.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

வேலூர், ஜூன்.23-

தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு வேலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் கே.வி.குப்பம் மற்றும் காட்பாடி சட்டமன்ற தொகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் ஏ.தயா தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு படிக்கணினி, கல்வி உதவித்தொகை, பிறந்த குழந்தைக்கு தங்க மோதிரம், ஆட்டோ, தையல் எந்திரம், சக்கர நாற்காலி, சலவை பெட்டி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இதில் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், பொது மக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

ரெட்ரோ பட விழாவில் சர்ச்சை பேச்சு:

நடிகர் விஜய்தேவரகொண்டா மீது வன்கொடுமை வழக்குப்பதிவு

தனி, ஜூன்.23-

ஐதராபாத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடிகர் சூர்யா நடித்த ரெட்ரோ பட முன்னோட்ட விழா நடந்தது. இதில் பங்கேற்ற பிரபல தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டா பழங்குடியினர் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்ததாக தெரிகிறது. இதனை கண்டித்து பழங்குடியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர் மீது வழக்குப்பதிவு செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதற்கிடையே விஜய்தேவரகொண்டா மன்னிப்பு கேட்டார். இருப்பினும் அவர் மீது வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரித்து வந்தனர். இதற்கிடையே தற்போது அவர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் ஐதராபாத்தில் உள்ள சஞ்சீவ் நகர் போலீஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளது.

அறிவிப்பு

பேரணாம்பட்டு வட்டம் எருக்கம்பட்டு கிராமம், ஆ.ம எண்.[illegible] எண்கொண்ட வரிந்து வரும் முகவரியில் வசிக்கும் S.தெருநீரன், S/o. எல்லன் என்பவர் தனது நிலத்து எல்லைக் கல்லைக் கடந்த 21.3.1981 தேதியில் இரத்தமாக பதிவு செய்ய விண்ணப்பம் செய்துள்ளேன். இது தொடர்பாக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்விளம்பர நாள் 15 நாட்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர் வாணியம்பாடி அவர்களிடம் நேரில் எழுத்து மூலம் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

மனுதாரர்
S.கைத்தீரன், S/o. எல்லன்

---

40 ஆண்டுகளாக தொழிற்கல்வி பணியில்
SRI VENKATESWARA POLYTECHNIC COLLEGE
Admission Started for 2025 - 2026
ADUKKAMPARAI, VELLORE-632 011. Ph : 0416-2230155, 2230015, Cell : 94422 32155
Co-Education | A Bridge Between You & Your First Job | Excellent Placement
Diploma Courses : DCE, DME, DEEE, DECE, DCSE
Lateral Entry - Direct Second Year : [illegible] Fees : [illegible] Fees : First Year - [illegible]
XII-C (COMMERCE & ACCOUNTANCY) Group-ல் பயின்ற மாணவர்களுக்கு கோபுரம் கிரிக்கெட் கூன்ற முன்னிட்ட சிறப்பு
2024-2025-ல் கல்வி கற்றவர்கள் சராசரி மதிப்பெண் : 51, அதில் 1625 மாணவ / மாணவிகள் கல்வி கற்று அரசு வேலைக்கு சென்றுள்ளனர்.
மாதச் சம்பளம் ரூ.18,000/- முதல் 35,000/- வரை பெறுகிறார்கள்
TATA | ROYAL ENFIELD | WIPRO | Indian Oil | Ashok Leyland | TRESLIN | JAGO | Core2 Technologies | Tata Power | adani | TITAN | HYUNDAI MOBIS | Tata Energy City | CHANDI BEVERAGES PVT LTD | Ganesh Benz | TIMKEN